1983 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தி வருகிறது, கடிதம் எழுதியிருக்கிறது. இதைவிட மிக அவசரமான திட்டங்களெல்லாம் இருக்கின்ற காரணத்தினாலே ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ள முடியாது என்ற முறையில் மத்திய அரசாங்கத்திடமிருந்து பதில் வந்தது. மீண்டும் ஒருமுறை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கடிதம் எழுதி, முன்னாள் மத்திய நிதியமைச்சரவர்களுக்கு, கட்டாயம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதற்கு நான் கூறிய கருத்துக்களை உள்ளடக்கிய கடிதம் எழுதப்பட்டது. இந்தத் திட்டத்தில் சேர்க்க முடியுமா என்று ஆய்வு நடத்த வேண்டுமென்று திட்டக் குழு அமைச்சருக்கு அந்தக் கடிதத்தைப் பரிந்துரை செய்திருப்பதாக நமக்குப் பதில் வந்திருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்று சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் விமான நிலையம் ஏற்படுத்தப் போவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. தஞ்சைக்கு மாநிலத் தலைநகரை மாற்றலாம் என்ற யோசனையும் இருப்பதால் தஞ்சையில் புதிய விமான நிலையம் ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இந்த இரண்டு விமான நிலையங்களும் மிகவும் முக்கியமானது என்று நாம் சொல்லியும்கூட மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்குச் சாதகமான பதில் வருவதாக ஒன்றும் தெரியவில்லை. அப்படியிருக்கும்பொழுது, இன்னும் சிலயிடங்களில் முடியுமா என்று பார்க்க வேண்டும். இந்த இரண்டும் நிறைவேறிய பிறகு மற்ற இடங்களைப்பற்றி நிச்சயமாகக் கவனிக்கலாம்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணிகளுக்கு இலவசமாக பால் வழங்கும் திட்டம்.

*வினா எண் 188— திரு. ரா. கிருஷ்ணன் மற்றும் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் பேருந்துகளில் பயணிகளுக்கு இனாமாக பால் வழங்கும் திட்டத்தின் மூலம் 1981–1982 ஆண்டில் ஆன செலவு எவ்வளவு?

(ஆ) தரமான பால் வழங்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) ரூபாய் 2,82,600 (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்திரண்டாயிரத்து அறுநூறு). 15–7–82 முதல் இந்தத் திட்டம் கைவிடப்பட்டு விட்டது.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு ஆண்டில் கிட்டத்தட்ட இரண்டே முக்கால் இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகியிருக்கிறது. கொடுத்த பாலோ தண்ணீர்ப் பால். அதனால் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டதா? இதை முறைப்படுத்தி பால் வழங்கு துறை மூலமாக, பால் உற்பத்தித் துறை மூலமாக இந்தப் பாலை வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டம் கைவிடப்பட்ட பிறகு, கொடுக்கப்பட்ட பாலே தண்ணீர்ப் பால் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே சொல்லியிருந்தால் நடவடிக்கையாவது எடுத்திருக்கலாம். நல்ல பாலாகத் தான் அனுப்ப வேண்டுமென்று சொல்லியிருந்தோம். ஆனால் பஸ்ஸுக்குள் வரும்பொழுது எப்படியோ தண்ணீர்ப்பாலாக மாறி இருக்கலாம். ஆகவே, இதையெல்லாம் கருத்திற்கொண்டுதான் இந்தத் திட்டத்தையே நாம் கைவிட்டு விட்டோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் பதில் சொல்லும் பொழுது பால் வழங்கும் திட்டம் நிறுத்தப்பட்டதாகச் சொன்னார்கள். அதற்காக நன்றியைச் சொல்லி, மீண்டும் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் வினா—விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

புதிதாக விடப்பட்டுள்ள நகர்ப்புற பேருந்துகள்

*வினா எண் 189—திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாக விடப்பட்ட நகர்புற பேருந்துகளால் அதே கழகத்தை சேர்ந்த மற்ற புறநகர் பேருந்துகளின் வருவாய் பாதிக்கப்படுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதற்கான சீர்திருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) பொதுமக்களின் வேண்டுகோளின்படி அவர்களுடைய நன்மையைக் கருதியே நகர்புற பேருந்துகள் புதிதாக விடப்பட்டுள்ளன. அப்பேருந்துகளினால் அக்கழகத்தைச் சார்ந்த புறநகர் பேருந்துகளின் வருவாய் அதிகமாக பாதிக்கப்படாத வகையில் அதைப் பரிசீலனை செய்து அதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்து வருகின்றோம்.